

# பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளால் மளமளவென கொரோனா தொற்று குறைந்தது

# சென்னையில் எடுத்த நடவடிக்கைகளை தமிழகம் முழுவதும் பின்பற்றலாம்

## அமைச்சர் எஸ்.பி.வேலுமணி யோசனை

**சென்னை, ஆக.4–**

**சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை மாநிலம் முழுவதும் பின்பற்றலாம் என நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி யோசனை தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சரின் ஆணைக்கிணங்க, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், ஆர்.காமராஜ், சி.விஜயபாஸ்கர், ஆர்.பி.உதயகுமார், எம்.ஆர்.விஜயபாஸ்கர், கே.பாண்டியராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்னையை பின்பற்றி...

இக்கூட்டத்தில் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி கூறியதாவது:–

முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 1.பரிசோதனைகள் அதிகரித்தல், 2.காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம்கள், 3.வீடுகள்தோறும் சென்று வைரஸ் தொற்று அறிகுறி உள்ள நபர்களை கண்டறிதல், 4.வைரஸ் தொற்று பாதித்த நபர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்துதல், 5.பொதுமக்கள் அடர்த்தியாக வசிக்கும் குடிசைப் பகுதிகளுக்கு தொண்டு நிறுவனங்களைக் கொண்டு சிறப்பு திட்டங்கள், 6.சென்னை சமூக களப்பணித் திட்டத்தின் மூலம் வைரஸ் தொற்று குறித்த ஐ.இ.சி. மற்றும் விழிப்புணர்வு, 7.வார்டுகளில் நடவடிக்கைகளை மேற்பார்வையிட நுண்திட்டம், 8. வைரஸ் தொற்று கண்டறியப்பட்டவர்கள் வாகனங்களில் ஸ்கிரீனிங் மையங்களுக்கு அழைத்து செல்ல வாகன வசதி, 9.கட்டுப்பாட்டு அறை, 10.ஆற்றுப்படுத்துதல் (counseling) அறை,

11.தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு தேவையான வசதிகளை செய்தல், 12.கோவிட் பாதுகாப்பு மையங்களில் வைரஸ் தொற்று பாதித்த நபர்களுக்கு சிகிச்சை உட்பட தேவையான வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் வைரஸ் தொற்று சென்னையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இதுபோன்ற வழிமுறைகள் மற்றும் சிறப்பு திட்டங்களை பிற மாவட்டங்களிலும் பின்பற்றி வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தலாம்.

### சிகிச்சையில் 12,190 பேர்

மேலும், சென்னை மாநகராட்சியில் 2.8.2020 வரை 1,01,951 நபர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 87,604 நபர்கள் குணமடைந்துள்ளனர். தற்சமயம் 12,190 நபர்கள் மட்டுமே சிகிச்சையில் உள்ளனர். சென்னை மாநகராட்சியில் மொத்தம் 39,537 தெருக்கள் உள்ளன. இதில் 5,549 தெருக்களில் மட்டுமே கொரோனா வைரஸ் தொற்று பாதித்த நபர்கள் உள்ளனர். மீதமுள்ள 33,988 தெருக்களில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு இல்லை.

சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ள 44 மாதிரி சேகரிக்கும் மையங்கள் மற்றும் 10 நடமாடும் மையங்கள் என மொத்தம் 54 மையங்கள் உள்ளன.

இதுவரை 7,10,000 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளன, உலகளவில் பெரு நகரங்களில் அதிக பரிசோதனை மேற்கோண்டதில் சென்னை மாநகராட்சியே முதலிடம். சென்னை மாநகராட்சியில் 10 லட்சம் நபர்களில் 87 ஆயிரம் நபர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றன. நாள்தோறும் சென்னையில் மட்டும் 12 ஆயிரம் முதல் 15 ஆயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### வைரஸ் தடுப்பு பணியில் 38 ஆயிரம் பேர்

சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் 38 ஆயிரத்து 198 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பொதுமக்கள் அடர்த்தியாக உள்ள குடிசைப் பகுதிகளில் லாரி மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் இடங்களில் தற்பொழுது குடிநீர் தொட்டிகள் வைக்கப்பட்டு சமூக இடைவெளியுடன் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு இதுவரை 14 லட்சத்து 23 ஆயிரத்து 68 கபசுரக் குடிநீர் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சியின் சார்பில் 18 ஆயிரத்து 614 படுக்கை வசதி கொண்ட கோவிட் பாதுகாப்பு மையங்கள் உள்ளன. சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி மற்றும் சுகாதாரத்துறையைச் சார்ந்த 2,311 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்று பாதித்த நபர்களை மருத்துவமனை அல்லது கோவிட் பரிசோதனை மையங்களுக்கு அழைத்து செல்ல 289 வாகனங்கள் உள்ளன.

### 30 ஆயிரம் பேர் தங்கும் மையங்கள்

குடிசைப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு முதலமைச்சரின் உத்தரவின்படி, பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக குடிசை வாழும் மக்களிடையே வைரஸ் தொற்று கண்டறியப்பட்டால் அவர்களோடு தொடர்பில் உள்ளவர்களை தனிமைப்படுத்த 30 ஆயிரம் நபர்கள் தங்கக்கூடிய மையங்கள் தயார்நிலையில் உள்ளன.

முதலமைச்சரின் உத்தரவின்படி, கோவிட் நோய் உள்ளவர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக நாளொன்றிற்கு 500 முதல் 600 காய்ச்சல் சிறப்பு முகாம்கள் நோய் அதிகம் கண்டறியப்பட்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 26 ஆயிரத்து 632 காய்ச்சல் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 15,39,385 நபர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களில் 81,318 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### விழிப்புணர்வு

வீட்டில் தனிமைப்படுத்தப் பட்டுள்ள நோயாளிகளை தொலைபேசியின் வழியாக கண்காணிக்கும் திட்டம் மாநகராட்சியின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 25 ஆயிரத்து 11 நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை சமூக களப்பணித் திட்டம் என்ற சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகள், துண்டு பிரசுரங்கள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 1,979 குடிசைப்பகுதிகளில் 92 தொண்டு நிறுவனங்களின் மூலம் 4,500 பணியாளர்களைக் கொண்டு கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 30.50 லட்சம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், 15 எல்.இ.டி. வாகனங்கள் மூலம் விழிப்புணர்வு, 129 செய்திக்குறிப்புகள் ஆகியவற்றின்மூலம் பொதுமக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று குறித்து விழிப்புணர்வு மற்றும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளின் காரணமாக சென்னையில் கொரோனா வைரஸ் தொற்று குறைந்து வருவதால், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மேலும் உத்வேகத்துடன் பணியாற்றி கொரோனா வைரஸ் தொற்று இல்லாத மாநிலமாக சென்னையை மாற்றிடும் வகையில் பணியாற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஹன்ஸ்ராஜ் வர்மா, நகராட்சி நிர்வாக துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ஹர்மந்தர் சிங், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையாளர் கோ.பிரகாஷ், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு சிறப்பு ஒருங்கிணைப்பாளர் பங்கஜ் குமார் பன்சால்,

சென்னை மாநகர காவல்துறை ஆணையர் மகேஷ்குமார் அகர்வால், நகராட்சி நிர்வாக ஆணையர் கா.பாஸ்கரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரிய மேலாண்மை இயக்குநர் த.ந.ஹரிஹரன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் சி.என்.மகேஸ்வரன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கே.எஸ்.பழனிச்சாமி, பேரூராட்சிகளின் இயக்குநர் எஸ்.பழனிச்சாமி,

இணை ஆணையாளர் (சுகாதாரம்) பி.மதுசுதன் ரெட்டி, இணை ஆணையாளர் (கல்வி) சங்கர்லால் குமாவாத், துணை ஆணையாளர் (பணிகள்) பி.குமாரவேல் பாண்டியன், துணை ஆணையாளர் (வருவாய்) ஜெ.மேகநாத ரெட்டி, வட்டார துணை ஆணையாளர்கள் பி.ஆகாஷ், பி.என்.ஸ்ரீதர், டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், மண்டல சிறப்பு அலுவலர்கள், மாநகராட்சி மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## சென்னையில் 1021 பேர்

# தமிழகம் முழுவதும் நேற்று கொரோனாவுக்கு 5,609 பேர் பாதிப்பு

**சென்னை, ஆக.4–**

**தமிழகம் முழுவதும் நேற்று 5,609 பேர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டனர்.**

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று 3,295 ஆண்கள், 2,314 பெண்கள் என மொத்தம் 5 ஆயிரத்து 609 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் வெளிநாடுகளில் இருந்து வந்த 6 பேரும், வெளிமாநிலங்களில் இருந்து வந்த 26 பேரும் அடங்குவர். நேற்று அதிகபட்சமாக சென்னையில் 1,021 பேரும், விருதுநகரில் 348 பேரும், திருவள்ளூரில் 332 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதன்மூலம் தமிழகத்தில் 2 லட்சத்து 63 ஆயிரத்து 222 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் 1 லட்சத்து 59 ஆயிரத்து 435 ஆண்களும், 1 லட்சத்து 3 ஆயிரத்து 760 பெண்களும், 3ம் பாலினத்தவர் 27 பேரும் அடங்குவர். அதில் 12 வயதுக்கு உட்பட்ட 13 ஆயிரத்து 44 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 32 ஆயிரத்து 971 முதியவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 5 ஆயிரத்து 800 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். இதில் அதிகபட்சமாக சென்னையில் 1,222 பேரும், காஞ்சீபுரத்தில் 528 பேரும், செங்கல்பட்டில் 438 பேரும் அடங்குவர். இதுவரையில் 2 லட்சத்து 2 ஆயிரத்து 283 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 56 ஆயிரத்து 698 பேர் உள்ளனர்.கொரோனாவுக்கு அரசு மருத்துவமனையில் 86 பேரும், தனியார் மருத்துவமனையில் 23 பேரும் என 109 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தனர். இதுவரையில் தமிழகத்தில் 4,241 பேர் உயிரிழந்துள்ளனர். சென்னையில் மட்டும் 2,176 பேர் இறந்துள்ளனர்.

தமிழகத்தில் 59 அரசு மற்றும் 63 தனியார் நிறுவனம் என மொத்தம் 122 பரிசோதனை நிறுவனங்களில் இதுவரை 27 லட்சத்து 33 ஆயிரத்து 295 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று மட்டும் 56 ஆயிரத்து 278 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதிகபட்சமாக சென்னையில் 1 லட்சத்து 2,985 பேர் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



**அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வத்தை, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சிட்லபாக்கம் ச.ராசேந்திரன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.**

# கொரோனா பரவல் எதிரொலி: கவர்னர் மாளிகையில் நடக்கும் சுதந்திர தின வரவேற்பு நிகழ்ச்சி ரத்து

சென்னை, ஆக.4

கவர்னர் மாளிகையில் 15–ந்தேதி நடக்கவிருக்கும் சுதந்திரதினவரவேற்பு நிகழ்ச்சி ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்று கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் வரவேற்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டு தேனீர் விருந்து அளிக்கப்படும்.

ஆனால் தற்போது கவர்னர் பன்வாரிலால் புரோகித்துக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. தற்போது டாக்டர்கள் அறிவுறுத்தலின் பேரில் கவர்னர் மாளிகையில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் ராஜ்பவனில் இருந்து செய்திக் குறிப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

சுதந்திர தினத்தை முன்னிட்டு கவர்னர் மாளிகையில் நடத்தப்படும் வரவேற்பு நிகழ்ச்சியை, கொரோனா பரவல் காரணமாக நடத்துவதில்லை என்று கவர்னர் பன்வாரிலால் புரோகித் முடிவு செய்துள்ளார்.

காவேரி மருத்துவமனையைச் சேர்ந்த டாக்டர்கள், கவர்னருக்கு 3ந் தேதி (நேற்று) மருத்துவ பரிசோதனை மேற்கொண்டனர். அவர் உடல்நிலை ஸ்திரமாக உள்ளது. அவரது உடல் நிலையை டாக்டர்கள் 24 மணிநேரமும் கண்காணித்து வருகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் கட்சியில் இருந்து நீக்கம்

சென்னை, ஆக.4–

அண்ணா தி.மு.க.வின் கொள்கை, குறிக்கோள்களுக்கு முரணான வகையிலும், கழகத்திற்கு களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் செயல்பட்டதாலும் கட்சி நிர்வாகிகள் 2 பேர் அண்ணா தி.மு.க.வில் இருந்து நீக்கி வைக்கப்படுவதாக முதலமைச்சரும், அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி, துணை முதல்வரும், அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் நலப்பிரிவு செயலாளர் ஞாலம் எஸ்.ஜெகதீஷ் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் வள்ளிநாயகிபுரம் ஊராட்சி கழக முன்னாள் செயலாளர் காந்தி என்ற காமாட்சி ஆகிய 2 பேரும் இன்று முதல் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார்கள்.

இவர்களுடன் கழக உடன்பிறப்புகள் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்று எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் கூறியுள்ளனர்.


**சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்**

CIN : L25199TN1989PLC017137

பதிவு அலுவலகம்: B11/W, சிப்காட் தொழிற்பேட்டை வளாகம், கும்மிடிப்பூண்டி– 601 201.
கார்ப்பரேட் அலுவலகம்: எண். 66 நியூ ஆவடி ரோடு 2வது தளம், எஸ்2 குறிஞ்சி அபார்ட்மெண்ட்ஸ், சென்னை 600 010. Tel: +91 44 2660 1313
Email: southernlatexltd@yahoo.com, Website: www.southernlatex.in
செய்தித்தாள் வெளியீடு நோக்கத்திற்கான வடிவம் (தனியானது/ஒருங்கிணைந்தது)
(செபி (எல்டிஓஆர்) விதிகள், 2015, விதி 47(1)(பி)ஐ பார்க்கவும்)

ரூ. லட்சத்தில்

| வ. எண். | விவரங்கள் | முடிந்த காலாண்டு 30.06.2020 | முடிந்த காலாண்டு 31.03.2020 தணிக்கையானது | முடிந்த காலாண்டு 30.06.2019 | முடிந்த கடந்த ஆண்டு தணிக்கையானது 31.03.2020 |
|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் (இதர வருமானத்தையும் உள்ளடக்கியது) | 4.14 | 34.04 | 4.29 | 49.36 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்)(வரி, விலக்கு மற்றும்/ அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்) | 0.42 | 22.48 | 0.36 | 23.21 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 0.42 | 22.48 | 0.36 | 23.21 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 0.42 | 22.48 | 0.36 | 23.21 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது) | 0.42 | 18.01 | 0.36 | 18.74 |
| 6. | சமபங்கு மூலதனம் | 735.92 | 735.92 | 735.92 | 735.92 |
| 7. | கடந்த ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட பேலன்ஷீட்டில் கொடுக்கப்பட்டுள்ளபடி ரிசர்வுகள் (மறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வுகள்) | (167.53) | (167.95) | (186.69) | (167.95) |
| 8. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.10/-) (தொடரும் மற்றும் தொடராதவை) 1. அடிப்படை 2. பலமிழந்தது | 0.006<br>0.006 | 0.2447<br>0.2447 | 0.005<br>0.005 | 0.25<br>0.25 |

குறிப்பு:
a) SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு /வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு /வருடாந்திர நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் மற்றும் கம்பெனியின் இணையதளம் www.southernlatex.inல் உள்ளது.
b) விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்கள், இந்த்ஏஎஸ் விதிகள்/ஏஎஸ் விதிகளின்படி, எது பொருந்துமோ அதற்கேற்ப லாபம் மற்றும் நஷ்ட அறிக்கையில் சரி செய்யப்பட்டுள்ளது.
c) மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு 03.08.2020 அன்று நடந்த இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
d) ஒப்பீடு நோக்கிற்காக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இடம்: சென்னை
தேதி: 03.08.2020

சதர்ன் லாடெக்ஸ் லிமிடெட்டிற்காக
நீலகண்ட பிள்ளை
நிர்வாக இயக்குநர்
DIN : 00084550



**ஆஷியானா அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.**

எண் 792/5, ஈஸ்வரி ஹோட்டல் காம்ப்ளக்ஸ், பெங்களூர் நெடுஞ்சாலை, சுங்குவார்ச்சத்திரம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சீபுரம் மாவட்டம், பின்கோடு: 602106, தமிழ்நாடு

**அறிவிப்பு**

SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, 30.06.2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பதிவு செய்ய கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் 12 ஆகஸ்ட் 2020 அன்று மாலை 3.00 மணிக்கு சென்னையில் உள்ள கார்ப்பரேட் அலுவலகத்தில் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஆஷியானா அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
கம்பெனி செயலாளர்

தேதி: 03.08.2020
இடம்: சென்னை



Mercantile

**மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்**

CIN: L65191TN1985PLC037309
பதிவு அலுவலகம் : 88, மவுண்ட் ரோடு, கிண்டி, சென்னை - 600 032. Tel: 044-40432209
Website: www.mercantileventures.co.in
Email: admin@mercantileventures.co.in

**அறிவிப்பு**

தேசிய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிபடுத்தல் தேவைகள்) கட்டுப்பாடுகள், 2015ன் கட்டுப்பாடு 47ன் படி, 30 ஜூன், 2020 அன்று முடிந்த முதலாவது காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, அங்கீகரிக்க, நிறுவனத்தின் இயக்குநர் குழுக்கூட்டம் வியாழக்கிழமை 13 ஆகஸ்ட் 2020 அன்று நடைபெறவுள்ளது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த தகவல் மும்பை ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணைய தளத்திலும் கிடைக்க செய்யப்படும்.

மெர்க்கன்டைல் வென்ச்சர்ஸ் லிமிடெட்டிற்காக
E N ரங்கஸ்வாமி
(DIN: 06463753)
முழுநேர இயக்குநர்

இடம்: சென்னை
தேதி : 03.08.2020



**EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்**

தி ஒபராய் குழும உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

**அறிவிப்பு**

செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 30 ஜூன், 2020ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்யவும் கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் புதன்கிழமை, 12 ஆகஸ்ட் 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

இடம்: கொல்கத்தா
தேதி: 4 ஆகஸ்ட் 2020



**ENROLMENT NOTICE**

"After ten days of the publication of this notice and within THREE Months thereafter. I, Nivedhitha SK, D/o S. Khandavadevelu, Aged 23 years, permanently residing at, Plot no. 10,5th Street, Kannan Avenue, Old Perungalathur, Chennai- 63, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**NIVEDHITHA SK**



**IDFC**

தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாய அமர்வு, சென்னை முன்பாக
நிறுவன விண்ணப்ப எண்.1436 ஆப் 2019
ஐடிஎப்சி பைனான்ஷியல் ஹோல்டிங் கம்பெனி லிமிடெட் ...விண்ணப்பதாரர்

**அறிவிப்பு வெளியீடு**

மேற்கண்ட நிறுவனத்தின் பங்கு மூலதனத்தை ஒவ்வொன்றும் ரூ.10 (ரூபாய் பத்து) மதிப்புள்ள 9,029,240,000 (தொள்ளாயிரத்து இரண்டு கோடியே தொன்னூற்று இரண்டு லட்சத்து நாற்பதாயிரம்) சம பங்கை உள்ளடக்கிய ரூ.90,292,400,000/- (ரூபாய் ஒன்பதாயிரத்து இருபத்தொன்பது கோடியே இருபத்து நான்கு லட்சம் மட்டும்)லிருந்து ஒவ்வொன்றும் ரூ.10 (ரூபாய் பத்து) மதிப்புள்ள 8,379,240,000 (எண்ணூற்று முப்பத்தேழு கோடியே தொன்னூற்று இரண்டு லட்சத்து நாற்பதாயிரம்) சம பங்கை உள்ளடக்கிய ரூ.83,792,400,000/- (ரூபாய் எட்டாயிரத்து முன்னூற்று எழுபத்தொன்பது கோடியே இருபத்து நான்கு லட்சம் மட்டும்)ஆக குறைப்பதை உறுதி செய்வதற்காக 2019 டிசம்பர் 11ம் தேதி அன்று சென்னையில் உள்ள தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தில் விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.

விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட அன்றைய தேதியில், மேற்கண்ட நிறுவனத்திற்கு கடனாளிகள் இல்லை. எனவே, தனிப்பட்ட கடன் வழங்குனர்களுக்கு அறிவிப்புகள் வழங்கப்படவில்லை. நவம்பர் 30, 2019 வரை ஈடுபெற்ற / ஈடுபெறாத கடன் வழங்குநர்கள் இல்லை என்று சான்றளிக்கும் அறிக்கை நிறுவனத்தின் பதிவு அலுவலகம், 4வது மாடி, கேபிடல் டவர், 555, அண்ணா சாலை, திரு.வி.க. குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை 600 018 மற்றும் 906/907, 9வது மாடி, எம்பசி சென்டர், ஜம்னாலால் பஜாஜ் சாலை, நரிமன் பாயிண்ட், மும்பை 400 021ல், திங்கள் முதல் வெள்ளி வரை அனைத்து வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பார்வைக்காக கிடைக்கிறது.

சம்பந்தப்பட்ட எந்தவொரு நபருக்கும் விண்ணப்பம் அல்லது கடன் வழங்குனர்களின் பட்டியலில் உள்ள விவரங்களில் ஏதேனும் ஆட்சேபனை இருந்தால், அது குறித்த (ஆதார ஆவணங்களுடன் இணைத்து) விவரங்களை அந்த நபரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியின் பெயர் மற்றும் முகவரி, மேலும் விவரங்கள் ஏதேனும் இருந்தால் அவற்றுடன் கீழ்க்கையொப்பமிட்டவருக்கு கம்பெனியின் பதிவு அலுவலகத்திற்கு இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட நேரத்திற்குள் எந்தவொரு ஆட்சேபனையும் பெறப்படாவிட்டால், கடன் வழங்குனர்களின் பட்டியல் உள்ளீடுகள், நிறுவனத்தின் பங்கு மூலதனத்தைக் குறைப்பதற்கான மேற்கண்ட மனுவின் கீழ் உள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் சரியானவை என்று கருதப்படும்.

இதற்கான விசாரணை தேதியாக செவ்வாய்க்கிழமை, நவம்பர் 03, 2020 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பாயம் இந்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொள்ளும் என்பதை கவனத்தில் கொள்ளவும். எந்தவொரு கடனாளியும் விசாரணையில் கலந்து கொள்ள விரும்பினால், அவர் ஆட்சேபனைகளுடன் தங்களது கோரிக்கையை வைக்க வேண்டும்.

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி
மகேந்திர N. ஷா
கம்பெனி செயலாளர்

ஆகஸ்ட் 03, 2020